**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 171** **நாள்: 15.11.2017**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வாக்காளர் பட்டியலின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தப் பணி கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தற்பொழுது நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியலின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம்–2018ல் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல் மற்றும் பிழைகளை சரிசெய்வதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் காலம் 01.11.2017 முதல் 30.11.2017 நீட்டிக்கப்பட்டுள்ளது. இதில் 15.11.2017 முதல் 30.11.2017 வரையிலான காலக்கட்டத்தில் வாக்காளர் பட்டியலில்

1. அனைத்து வாக்காளர்களையும் விடுபடாமல் சேர்ப்பதற்காகவும்,
2. இறந்த மற்றும் நிரந்தரமாக குடிபெயர்ந்த வாக்காளர்களின் பெயர்களை நீக்கவும்,
3. வாக்காளர் பட்டியலில் உள்ள பிழைகளை சரிசெய்யவும்,
4. ஸ்மார்ட் போன் உதவியுடன் குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள் அவர்களின் அலைபேசி எண்கள் மற்றும் இதர விவரங்களை பெற்று வாக்காளர்களுக்கான சேவையை சிறப்பாக அளிக்கவும்,
5. வாக்காளர் பட்டியலில் இடம்பெற்று தற்பொழுது அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் மற்றும் வாக்காளர் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கும் அயல்நாட்டில் வாழும் இந்தியக் குடிமக்கள் (Indian Citizen) ஆகியோரை கண்டறியவும்,
6. சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம்–2018ன் போது வரப்பெற்ற படிவங்களில் சிறப்பான முறையில் கள விசாரணை செய்யவும்,
7. அ) வாக்குச்சாவடியில் தேவையான வசதிகளை உறுதிப்படுத்தும் விதமாகவும்,

   ஆ) தற்பொழுது உள்ள வாக்குச்சாவடி தொடர்பான விவரங்களும் மேலும் 3 கட்டடங்களை தேர்வு செய்வதற்கும்,

   இ) அந்தந்த வாக்குச்சாவடிப் பகுதியில் உள்ள அஞ்சல் அலுவலக விவரங்களை சேகரிப்பதற்கும்,
8. 17 வயது நிரம்பிய எதிர்கால வாக்காளர்களின் விவரங்களை சேகரிப்பதற்கும்,

ஏதுவாக சிறப்பு இயக்கத்தை (special drive) நடத்த மாவட்டத் தேர்தல் அலுவலர்களுக்கு இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி, சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கிய 16 சட்டமன்ற பேரவை தொகுதியில் உள்ள 3768 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் உரிய படிவங்களுடன் வீடுவீடாகச் சென்று கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட உள்ளனர். அவ்வமயம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்குத் தேவையான விவரங்களை தந்து வாக்காளர்கள் தங்களுடைய ஒத்துழைப்பை நல்குமாறும் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் பிழைகளைச் சரிசெய்ய அந்தந்த படிவங்களை அளித்து வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. அரசியல் கட்சிகளும், பொதுமக்களும் இந்தப் பணிக்கு ஒத்துழைப்பு நல்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**